# மேஜர் ஜேம்ஸ்




தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இலக்கில்லாமலும், கண்மூடித்தனமாகவும், செல்களும், ஆட்டிலறிகளும் வீழ்ந்து வெடித்தன. எங்கு பார்த்தாலும் செல் சத்தங்களும், மக்களது அவல ஓலங்களும் காதைப் பிளந்தன. கவச வாகனங்களும், டாங்கிகளும் தமது இஸ்டத்துக்கு இந்த மண்ணில் அகலக் கால் வைத்தன. வயல்களென்றோ, வீடுகளென்றோ, தோட்டங்களென்றோ பாராது அவை சீறிப் பாய்ந்தன. காக்கி உடுப்பில் வரண்ட முகங்களுடன் துப்பாக்கிச் சனியன்களை ஏந்திய வண்ணம் பல ஆயிரம் இந்திய இராணுத்தினர் தமது காலடித்தடங்களை பதித்தனர் இது ... இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் யாழ் நகரைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முயற்சித்த நேரம்.

கவச வாகனங்கள், டாங்கிகளின் வரிசை ஒன்று கோப்பாயூடாக கோண்டாவிலை நோக்கித் தனது பாரிய சக்கரங்களை இந்த மண்ணில் பதித்தவண்ணம் விரைந்து வந்தது, பயங்கரமாக உறுமிய வண்ணம் வந்த டாங்கிகள் அங்கு நின்ற விடுதலைப் புலிகளுக்கு இராட்சதன் போன்ற தோற்றத்தைக் கொடுத்ததில் ஆச்சரியமேதுமில்லை. இந்தியப் படைகளை எதிர் கொள்ள யாழ் நகரில் பல்வேறு இடங்களில் விடுதலைப் புலிகள் நிலைகொண்ட நேரம் அது. கோண்டாவிற்சந்திக்கு அண்மையிலும் சில விடுதலைப் புலிகள் தாங்கள் முதன் முதலாக பார்க்கும் அந்த இராட்சதனை எதிர்கொள்ளத் தயாராகின்றனர்.

கோண்டாவில் சந்திக்கு அண்மையில் இருந்த ஒரு வீட்டிலிருந்து முன்னே விரைந்து வரும் டாங்கிகளை எதிர்கொள்ளத் தயாராகின்றான் விடுதலைப் புலி வீரனொருவன். அவன் தோளில் குறிபார்த்த வண்ணம் பசூக்காவை வைத்திருந்தான். அவன் பின்னால் எதற்கும் தயாராக பசூக்காவிற்குரிய லோடர் நின்றான். 'மச்சான் எங்கட பக்கந்தான் வருகிறாங்கள்" என்ற படியே பசூக்காவிற்கு டிகரைத் தட்டினான். பசூக்கா முழங்குகின்றது. அதிலிருந்து புறப்பட்ட செல் முன்புறம் பட்டு வெடிக்கின்றது. அந்தோ....ஆனாலும் அந்த டாங்கி உறுமிய வண்ணம் இவர்களிருந்த வீட்டை நோக்கிப் பாய்ந்து வருகின்றது.

'பட்டு வெடித்தும் இப்படிச் சனியன் வருகுதே பக்கத்து வளவிற்குப் போவம்" என்று கூறிய பசூக்காவீரன் தனது லோடரை அழைத்துக் கொண்டு ஓடினான். அவ்விரு விடுதலைப் புலிகளும் அருகிலுள்ள கமுகம் தோட்டத்திற்குப் பாய்ந்து சென்று நிலையெடுக்கின்றார்கள். விடுதலைப்புலிகள் இருந்த வீட்டையிடித்து துவம்சம் செய்த வண்ணம் அந்த டாங்கி வெளிப்படுகின்றது. டாங்கியிலிருந்து செல்களும்,50 கலிபர் ரவைகளையும் சரமாரியாக பொழிகின்றான். மீண்டும் பசூக்கா முழங்குகின்றது. இம்முறை முன்னாலிருந்த கமுகம் மரமொன்று அதனை வாங்கி சரிகின்றது. வரிசை வரிசையாய் கவசவாகனங்களும், டாங்கிகளும் வந்து கொண்டிருக்கின்றன. துப்பாக்கிச் சனியன்களுடன் இந்தியக் காலாற் படையினர் சுற்றிவளைக்கும் ஆபத்துள்ள அந்த இக்கட்டான நேரம்.... விடுதலைப்புலி வீரர்கள் மனந்தளராமல் அடுத்த செல்லை லோட் பண்ணுகின்றார்கள். முன்னால் வந்த டாங்கி இவர்களுக்கு முதுகைக் காட்டிய வண்ணம் றோட்டிற்கு ஏறுகின்றது. இந்த முறை அந்த வீரனது குறிதவறவில்லை. 'மச்சான் அடிச்சுப்போட்டன் " என்று சந்தோசத்துடன் கத்தினான் அந்த வீரன். பசூக்கா முழங்கியவுடன் அந்த டாங்கி ஒரு முறை தள்ளாடியது. பின்பு குபீரென அதன் பின் புறத்தில் நெருப்புப் பற்றி எரிகின்றது. அடுத்ததாக வந்த டாங்கி இதனை முந்த முயற்சிக்கும் வேளையில் முதலாவது டாங்கிபயங்கரமாக வெடித்துச் சிதறியது. இந்த வெடிப்பில் இரண்டாவது டாங்கியும் அதிர்ந்தது. பின்பு அதுவும் வெடித்துச் சிதறியது.

ரஸ்யத் தயாரிப்பான இரண்டு T.72 என்ற டாங்கிகளே இவ்வாறு பரிதாபகரமாக அழிந்தன. 'பார் ஓடுறாங்கள்" பசூக்காவுடன் எழுந்தவாறே அந்த வீரன் தனது நண்பனுக்கு கூறுகின்றான். டாங்கிகள் வெடித்ததைத் தொடர்ந்து இந்தியபடைகள் பின்வாங்குகின்றன. பசூக்கா வீரனது தலையில் காயம்பட்டு குருதி ஓடுகின்றது. அந்த நிலையிலும் அவன் முகத்தில் ஒரு சிரிப்பு. தமிழீழப்போராட்ட வரலாற்றில் இரண்டு டாங்கிகளை ஒரே தாக்குதலில் வீழ்த்திய அந்த வீரன் வேறு யாருமல்ல. அவன் தான் மேஜர் ஜேம்ஸ்.

வீரம் விளைந்த வல்வை நகர் பெற்றெடுத்த அருந்தவப்புதல்வன் ஜேம்ஸ். இவன் 6.9.1962ம் ஆண்டு உருத்திராபதி தம்பதிகளின் ஐந்தாவது புதல்வனாகப் பிறந்தான். சிறுவயதிலேயே பொது வேலைகளிலும் பொது விளையாட்டுத் துறைகளிலும் ஆர்வம் காட்டினான். காட்லிக் கல்லூரியில் க.பொ.த உயர்தரத்தை முடித்த ஜேம்ஸ் 1983ம் ஆண்டு விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பகுதி நேர உறுப்பினராகினான். அடிக்கடி சிங்களப்படைகளின் தாக்குதல்களிற்கு உள்ளாகும் வல்வை நகரில் பிறந்த ஜேம்ஸ் மண்ணின் விடுதலையையும், மக்களின் விடுதலையையும் நன்குணர்ந்தான்.

1984ம் ஆண்டு முழுநேரப் போராளியாகின்றான். இயக்கத்தில் ஆரம்பகாலப் பணியாக அரசியல் வேலைத்திட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டான். வல்வெட்டித்துறை, தொண்டமானாறு, பொலிகண்டி, உடுப்பிட்டி ஆகிய பகுதிகளில் இவனது அரசியல் வேலைத் திட்டங்கள் அமைந்தன. எங்கெங்கு சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் இருக்கின்றார்களோ அங்கு இவன் பிரசன்னமாய் அவர்களில் ஒருவனாய் இரண்டறக் கலந்துகொள்வான். இந்தக் காலகட்டத்தில் விடுதலையில் ஆர்வமாக இருந்த இளைஞர்கள் பலரைத் இயக்கத்தில் சேர்த்தான். தொண்டமானாறு முகாம் தொண்டமானாற்றை ஏனைய பகுதிகளுடன் இணைக்கும் பாதைகளுக்கு அச்சுறுத்தலாக இருந்ததை அவதானித்த ஜேம்ஸ் தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்துக்குப் பின்புறமாக இடைக்காட்டை இணைக்கும் பாதையொன்றை போடுவித்தான்.

பத்தாம் முகாமில் இராணுவப் பயிற்சியை முடித்த ஜேம்ஸ் புலிகளின் இராணுவச் செயலகத்தில் கடமையாற்றினான். இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் தமிழீழமண்ணில் தனது இராட்சதக் கால்களை அகலப் பரப்பி வந்த போது சந்தோசம் மாஸ்டர் தலைமையில் போரிடுகின்றான். கோண்டாவிலில் நடைபெற்ற இவ்வாறான சண்டையின் போது தலையில் காயமுற்று சிகிச்சைக்காக காட்டிற்கு போகின்றான். காட்டிற்குள் இவன் களஞ்சியங்களிற்கு பொறுப்பாளராக நியமிக்கப்படுகின்றான். எந்த வேலையையும் நேர்த்தியாகச் செய்யும் பாங்கும் அதே நேரத்தில் குறும்புத்தனமாகச் செய்து பின்பு அதனை சமாளிக்கும் வண்ணமும் எல்லோரையும் கவர்ந்தது. இவனுடைய குறும்புத் தனத்திற்கு காட்டிற்குள் நடந்த சம்பவம் ஒன்று நல்ல எடுத்துக்காட்டாகும்.

காட்டினுள் தலைவர் ஒருமுறை அருமையான இனிப்புப் பலகாரம் செய்திருந்தார். போராளிகள் எல்லோரையும் வரிசையாக வரச்சொல்லிவிட்டு தலைவர் தனது கைப்படவே எல்லோருக்கும் அதனை வழங்கினார். அத்துடன் அதன் சுவையையும் ஒவ்வொருத்தராகக் கேட்டார். அது சுவையாகச் செய்யப் பட்டதனால் ஒவ்வொருத்தருக்கும் ஒரு சிறிய பங்கே கிடைத்தது. ஜேம்ஸ்சுக்கு இனிப்பு என்றால் உயிர். ஜேம்ஸின் முறை வந்தது. தலைவர் கொடுத்த பலகாரத்தை வாய்க்குள் போட்டுக் கொண்டான். "எப்படியிருக்கு?" எனத்தலைவர் கேட்டார். ஆழ



மேஜர் ஜேம்ஸ்
(உருத்திராபதி சிறீதர் – வல்வெட்டித்துறை)

மாகச் சிரித்துவிட்டு "சரியாகத் தெரியவில்லை அண்ணா இன்னும் ஒரு துண்டு தாங்கோ சொல்றேன்" என்றான். தலைவர் சிரித்தவாறே இன்னுமொரு துண்டைக் கொடுத்துவிட்டு எப்படி இருக்கு? என்று கேட்டார். மீண்டும் உதட்டின் மேல் விரலை வைத்துச் சிரித்து விட்டு இன்னுமொரு துண்டு தந்தால் சரியாகச் சொல்வேன் என்றான். எல்லோருக்கும் கொடுத்து மிச்சம் இருந்தால் உனக்குத்தான் என்றார். அதன் படியே மிகுதியாக இருந்தது ஜேம்ஸின் குறும்புத் தனத்திற்குக் கிடைத்தது.

காட்டிற்குள் இந்திய இராணுவத்துடன் நடைபெற்ற முதலாவது மோதல் உட்பட பல சண்டைகளில் கலந்து கொண்டு தனது வீரத்தை ஜேம்ஸ் வெளிப்படுத்தினான். காட்டினில் தலைவரது நேரடியான கவனிப்பில், வளர்ப்பில் ஜேம்ஸ் முழுமையான போராளியாகின்றான். தலைவரது பாசறையில் இவன் கற்றுக்கொண்டது ஏராளம். பின்னாளில் பொறுப்பு வாய்ந்த தளபதியாக இருக்கும் போது அடிக்கடி காட்டில் நடந்தவற்றை அவன் நினைவுகூரத் தவறவில்லை.

1988 ஆம் ஆண்டு தமிழீழத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த வடமராட்சிப் பகுதியின் தளபதியாக நியமிக்கப்படுகின்றான். குறுகிய காலத்திற்குள் ஜேம்ஸ் தனது செயற்பாடுகளால் மக்களது அன்பையும், ஆதரவையும் பெற்றுவிடுகின்றான்.

இந்திய இராணுவத்தின் நெருக்கடியான நேரத்தில்கூட காயப்பட்ட போராளிகளை பராமரிப்பதற்கும், காட்டிற்குத் தேவையான பொருட்களை அனுப்புவதற்கும் வடமராட்சியை ஒரு தளமாகப் பயன்படுத்துகின்றான்.

இதே நேரத்தில் இந்திய இராணுவத்தின் மீது பல்வேறு இடங்களில் தாக்குதல்களை மேற்கொண்டு ஆயுதங்கள் பலவற்றைக் கைப்பற்றினான். எந்தத் தாக்குதலாயினும் R.P.G அடித்துத் தாக்குதலை ஆரம்பிப்பது தான் இவன் வழக்கம். பருத்தித்துறை VM றோட்டில் உள்ள காவலரண் மீதானதாக்குதலில் கையில் காயப்படுகின்றான் மேஜர் ஜேம்ஸ்.

1989 இல் வல்வை நகரின் மீது வெறியாட்டம் ஆடிய இந்தியப் படைமீது திட்டமிட்ட தாக்குதலை மேற்கொண்டு இராணுவத்தினர் பலரை வீழ்த்தி ஆயுதங்களை கைப்பற்றுகின்றான்.

இந்தியப்படை வெளியேறியதைத் தொடர்ந்து தீவகப்பகுதி பொறுப்பாளராக மேஜர் ஜேம்ஸ் நியமிக்கப்பட்டான். இச்சந்தர்ப்பத்தில் தான் இவனுடன் ஒன்றாகப் பழகும் வாய்ப்பு எனக்கு கிட்டியது. தீவகப்பகுதி மக்களின் சமூக பொருளாதாரப் பிரச்

# ஒரு உணர்வுபூர்வமான ஒளியேற்று வைபவம்

## மாவீரர் சுடரொளி ஏற்றும் வைபவம் பற்றிய கண்ணோட்டம்

மாவீரர் துயிலும் இல்லத்தில் நிகழ்ந்த அந்த நிகழ்ச்சி - மாவீர் சுடர் ஏற்றும் வைபவம் - அங்கு கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களை- போராளிகளை ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது. எங்கள் தேசிய விடுதலைப் போராட்டத்தில் உணர்வுபூர்வமான கூட்டம் இது. இவ்வாறாக இதை வர்ணித்தால் அந்த நிகழ்ச்சியைப் பார்த்த எவரும் மறுத்துக் கூறமாட்டார்கள்.

மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ள கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் அமைந்துள்ள அந்த மைதானத்தினுள் காலடி எடுத்து வைக்கிறோம். இருபக்கங்களிலும் போராளிகள் அணிவகுத்து நிற்கின்றார்கள். நடுவில் அணிவகுப்பு நிகழ்ச்சிக்கு தயாரான போராளிகளும் விடுதலைப்புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்களும் ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பில் நிற்கின்றார்கள். அதேவேளை தங்கள் தங்கள் பிள்ளைகளின் கல்லறைகளுக்கு முன்னால் மாவீரரின் பெற்றோர் நிற்கின்றனர். அதுவும் ஒரு அணிவகுப்பாகவே காட்சியளித்தது. ஒலிபெருக்கி அறிவிப்பாளருக்கருகில் தங்கள் பிள்ளைகளின் கல்லறைகளை சரியாக இனம்காட்டுமாறு வேண்டி மாவீரரின் பெற்றோர் நிற்கின்றனர். நேரம் 12 மணியை நெருங்கிக் கொண்டிருந்தது. அப்போது ஒலி பெருக்கியில் ஒரு அறிவிப்பு 'எமது

